நாள் 14.09.2023.

அசல் வழக்கு எண் 17/2018

வா சா 1 பலவேசம், த/பெ மாடன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் விவரம்சொன்னேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது என்ன ஆவணங்கள் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றுசொன்னால் சரிதான். எந்த சர்வே எண்ணில் எவ்வளவு இடத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால், சர்வே எண் 1118 ஏ-ல் 43 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 43 சென்டில் மொத்தம் 5 வீடுகள் இருக்கிறது என்ாறல் சரிதான். யார் யாருக்கு வீடு உள்ளது என்றால், செல்வராஜ் என்பவருக்கும், முத்துபட்டன் என்பவருக்கும், வள்ளிவேல் என்பவருக்கும், ஆறுமுகம் என்பவருக்கும், மற்றும் பொன்னத்தாள் ஆகியோருக்கும் இடம் இருக்கிறது. சுந்தரி என்பவர் பெயரில் இடம் உள்ளதா என்றால், முத்துப்பட்டன் மனைவிதான் சுந்தரி ஆகும். வேல்ச்சாமி என்பவர் பெயரில் வீடு உள்ளதா என்றால். உள்ளது அது செல்வராஜ் என்பவரின் மகன்தான். மேற்படி நபர்களை இவ்வழக்கில் வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவும் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து விவரத்தில் 43 செண்டில் 5 வீடுகள் உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்து யாருக்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறோம் என்றால், எனது அப்பா கிரையம் வாங்கியது. அப்பா எந்த வருடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் 1942 ல் கிரையம் வாங்கினார்கள். அந்த கிரைய

பத்திரத்தில் கண்ட சொத்தைதான் நாங்கள் வழக்கு சொத்தாக காண்பித்திருக்கிறோம் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் அசல் என் கைவசம் இருக்கிறதா என்றால், இருக்கிறது. அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால், அது தொலைந்துவிட்டது. என்னிடம் காட்டப்படும் வா சா ஆ 1 பத்திரம் நான் தாக்கல் செய்த பத்திரம் என்றால் சரிதான். பத்திரத்தை நான் படித்து பார்த்துதான் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். எனது பத்திரத்தில் 43 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான் நான் திருத்தவில்லை. எனது அப்பா வா சா ஆ 1 ஆவணத்தின் படி எவ்வளவு இடம் கிரையம் வாங்கினார்கள் என்றால், இரண்டு சொத்தையும் சேர்ந்த்து 67 சென்ட் ஆகும் நான் சொல்லும் மற்றொரு சொத்து எவ்வளவு செண்ட் என்றால், 24 சென்ட் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது அப்பா கிரையம் பெற்ற சொத்தின் சான்றிட்ட நகல் என்றால், சரிதான் அது **பி சா ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனாரின் சொத்துக்களை பொறுத்து எனக்கு ஏற்கனவே எனது அப்பா ஆவணம் எழுதிவைத்திருக்கிறரா என்றால், எழுதி வைக்கவில்லை அனுபவம்தான் தந்தார். எனது தகப்பனார் பெயரில் உளள சொத்துக்களை பொறுத்து நாங் கள் சகோதரர்கள் வாய்மொழியாக பாகம் வைத்திருக்கிறோமா என்றால், வாய்மொழியாக பாகம் வைத்து நாங்களாக அந்த அந்த இடத்தை அனுபவிக்கிறோம். 24 சென்ட் இடத்தை பொறுத்து அசல் வழக்கு 3/20 என்று ஒரு வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்யவும் வழக்கறிஞருக்கு நான்தான் விவரம் சொன்னேன் என்றல சரிதான். என்னிடம்

காண்பிக்கப்படும் பிராது நகல் அது என்றால் சரிதான். அது **பி சா ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் எனது தகப்பனார் காலம் சென்ற பிறகு 1992 ம் வருடம் நாங்கள் வாய்மொழியாக பாகம் செய்துகொண்டோம் என்று நான் சொல்லியு'ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பண்டாரம் மற்றும் ஆறுமுகத்திற்கு 33 சென்ட் ஒதுக்கப்பட்டதாக அ வ எண் 3/20 பிராதில் சொல்லியு'ளேன் என்றால் சரிதான். மேலும் புல எண் 1118 ஏ-ல் செண்ட் 33 ல் அவரது வாரிசுகள் வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாக சொல்லியு'ளேன் என்றால் சரிதான். அந்த பாகத்தின் அடிப்படையில் பிராது 3/20 ல் சொல்லியுள்ள 24 சென்ட் இடம் மட்டும்தான் எனக்கு ஒதுக்கப்பட்டதாக அசல் வழக்கு 3/20 ல் சொல்லியு'ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தி ற்கு பட்டா உள்ளதா என்றால் இருக்கிறது எவ்வளவு இடத்திற்கு பட்டா உள்ளது என்ாறல் 41 1/4 சென்டிற்கு பட்டா வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்த புல எண்ணில் எனது அப்பா கிரையம் பெற்ற சொத்தின் படி 33 சென்ட் தான் எங்களுக்கு பாத்தியம் என்றால், அது தவறு எனக்கு 43 சென்ட் உண்டு. வழக்கு சொத்தி ன் கீழ் பக்க எல்கை என்ன என்றால், வள்ளியம்மாள் இடம் உள்ளது. வள்ளியம்மாள் இடம் மட்டும்தான் உள்ளதா அல்லது வேறு நபர்களுக்கு இடம் உள்ளதா என்றால், மாடன் என்பவர் கிரையம் வாங்கியிருக்கிறர் ஆர் சி பள்ளியின் காம்பவுண்ட் இருக்கிறது. வழக்கு சொத்திற்கான பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஞாபகம் இல்லை. அந்த பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால், எனது அண்ணன் பண்டாரம் பெயரில் இருக்கிறது. அது எனது அண்ணன் பெயரில் உள்ள தனிப்பட்டா என்று சொன்னால் சரிதான். அதன் சர்வே எண் 1118 ஏ/9 என்றா'

சரிதான். நான் அந்த சொத்தைதான் வழக்கு சொத்தாக காண்பித்திருக்கிறேன் என்றால் சரிதான். எனது அண்ணன் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். எனது அண்ணனின் வாரிசுகள் இருக்கிறார்களா என்றால், இருக்கிறார்கள். எனது அண்ணனின் வாரிசுகளை நான் இவ்வழக்கில் கட்சியாக சர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் அந்த இடத்தில் இருக்கவில்லை நான்தான் வசிக்கிறேன். எனக்கு தாவா இடத்தில் தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லை என்றால், சரிதான். எனது அண்ணன் மக்களுக்காகவேண்டியும்தான் நான் வழக்கு போட்டிருக்கிறேன். நீதிமன்ற ஆணைய் இடத்தை பார்வையிட்டு சர்வேயர் துணையுன் இடத்தை அளந்து அறி'கையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால், பார்க்கவில்லை. 4ம் பிரதிவாதி ஆக்கிரமித்து வைத்துள்ளதாக ஒரு சொத்து சொல்லியு'ளோம் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும் எவ்வளவு சென்ட் ் ஆக்கிரமித்து இருக்கிறார் என்றால், 2 சென்ட் ஆக்கிரமித்திருக்கிறார். 2 சென்டை யார் ஆக்கிரமித்்திருக்கிறார் என்றால், மிக்கேல் மட்டும்தான் ஆக்கிரமித்து வீடும் கட்டியிருக்கிறார். 1ம் பிரதிவாதியை தவிர தேவராஜ், செல்வராஜ்க்கு , வெள்ளத்துரைக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் அது தவறு. அவர்கள்தான் ஒரே நீட்டமாக பாகம் வைத்திருக்கிறார்கள். நான் 4ம் பிரதிவாதி வெள்ளத்துரை மீதுதான் வழக்கு போட்டிருக்கிறேன் என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் வந்து இடத்தை அளக்கும்போது அந்த சொத்தின் 5 வீட்டில் கீழ்புறம் உள்ள வீடு பஞ்சாயத் து மூலம் அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடு என்றால் சரிதான். அந்த வீட்டில் பயனாளர் பெயர் அகஸ்தியன் என்று உள்ளது

என்றால் சரிதான் அகஸ்தியன் யார் என்றால் அவர் எனது உறவினர்  அவருக்கு தாவா இடத்தில் எந்த உரிமை உள்ளது என்றால், எந்த உரிமையும் இல்லை. எந்த அடிப்படையில் அகஸ்தியன் வீடு தாவா இடத்தில் கட்டியிருக்கிறார் என்றால், அகஸ்தியன் பெயரில் லோன் வந்தது  அதனை செல்வராஜிடம் நீ கட்டிக்கொள் என்று சொல்லி வீட்டை கட்டியுள்ளார். அகஸ்தியன் செல்வராஜை லோன் கட்டிமுடிக்கச்சொன்னார். வழக்கு சொத்தில் எனது தகப்பனார் கிரையப்பத்திரத்தின் படி எங்க்ளுக்கு 33 சென்ட்டிதான் உண்ட்டு என்றும் நாஙக்ள் மோசடியாக ஆவணத்தை திருத்தம் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் எனவே  நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைகக்த்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் சர்வே எண் 1118 சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று்ம் நான் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தை பொறுத்துள்ள அசல் ஆவணமும் பட்டாவும் தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்ற காரணத்தினால்தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல  நான் சொல்லுவதுபோல் 2ம் தபசில் சொத்்து என்று ஸ்த்லத்தில் சொத்து இல்லை என்றும் அதனால் 1ம் தபசில் சொத்தி்ன் ஒரு பகுதி2ம் தபசில் என்று சொல்லி நான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் நான் கோரி்யுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.